2021

No. of Printed Pages : **5**

2021 51580 **4909**

*Register Number*

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு - அ

**அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

**1.** கடலலை - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி கூறுக.

**2.** செம்பொன், சிற்றூர் பிரித்து எழுதி புணர்ச்சி விதி கூறுக.

**3.** ''பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது''
– இக்குறட்பாவை உரைநடைப்படுத்தி எழுதுக.

**4.** தொழிற்பெயர் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

**5.** ''செவலையை வண்டியில் பூட்டு.''
– இது எவ்வகை ஆகுபெயர்? விளக்கம் தருக.

**6.** இரண்டாம் வேற்றுமை உருபுகள் யாவை? அவை எவ்வெவ்வப் பொருள்களில் வரும்?

**7.** இரட்டைக் கிளவிக்கும், அடுக்குத் தொடருக்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

[ Turn over

8. திணை வழுவமைதியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

9. **''வேலன் படித்தான்''**, ''கண்ணனது பை.''

— இத்தொடர்களில் உள்ள வேற்றுமைகளை சுட்டி எழுதுக.

10. கட்டுரை எழுதுவோர் மேற்கொள்ளவேண்டிய பொது விதிகளில் நான்கினைக் கூறுக.

## பிரிவு - ஆ

**எவையேனும் 5** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. உடம்படுமெய் பற்றி விளக்குக.

12. ''தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்.''

— இவ்வுரைப் பத்தியின் மையக் கருத்தையும் அருஞ்சொற் பொருள்களையும் எழுதுக.

13. கீழுள்ள உரையாடலைச் செய்தியாக்குக.

குமணன் : புலவர் பெரும வரவேண்டும்!
தமிழன்னையின் கண்மணியே!
வணக்கம்.

புலவர் : வள்ளல் பெருமான் வாழ்க!
நாட்டில் கண்டு களிக்கவேண்டிய
நான், இன்று காட்டில் சந்திக்கின்றேன்,
இஃது என் பொல்லாத காலம்.

குமணன் : புலவரே! தங்களை இங்குக்
காண நேர்ந்தது, என் நல்ல
காலம்! இந்நாள் எனக்கு
ஒரு பொன்னாள்; நன்னாள்.

14. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்று தயார் செய்க. கட்டுரையில் பயன்படுத்தப்படும் பொருத்தமான மேற்கோள், பழமொழிகள், நிகழ்வு எவையேனும் இரண்டு எழுதுக.

15. வாவியுறையும் மடவனமே எந்தன்
ஆவி யுவந்தளித்தர யாதியால் - காவினிடைத்
தேர்வேந்தற் கெனிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாலை பதைத்து.
    (i) வாவி, கா - பொருள் தருக.
    (ii) இப்பாடலடிகளை உரைநடைப்படுத்துக.

16. வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சியில் ஒவ்வொன்றிற்கும் வல்லெழுத்து மிகா இடங்கள் நான்கினை எழுதுக.

17. உரைநடைப்படுத்துதல் அல்லது அந்வயப்படுத்துதலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. ''வந்துமுனி யெய்துதலும் மார்பினணி யாரம்
அந்தர நிலத்திரவி அஞ்சவொளி விஞ்ச
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரனெனக் கடிதெழுந்தடி பணிந்தான்''
    1. கோடிட்டச் சொற்களைப் பிரித்தெழுதுக.
    2. இறைவி, கந்தம், கடிது – இச்சொற்களுக்கான பொருளை எழுதுக.

## பகுதி-II
## பிரிவு-அ

**அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் 100 வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

10x2=20

19. மொழி, மரபு சார்ந்தது - விளக்குக.

20. மொழியும் பால் வேறுபாடும் பற்றி கூறுக.

21. உட்கொள்ளுந் திறன்கள், வெளியிடுந் திறன்கள் பற்றி எழுதுக.

22. திருந்திய பேச்சின் நல்லியல்புகளைக் கூறுக.

23. முதலெழுத்துகள் பிறக்கும் முறையை விளக்குக.

24. அரையுயிர்கள் யாவை? அவை எவ்வாறு பிறக்கின்றன?

25. செயல்திட்ட முறையின் நன்மைகளை எழுதுக.

26. இணைத்துக் கற்பித்தல் – விளக்குக.

27. தொடர் செயல் – கூறுக.

28. தமிழ்ப் பேரகராதி மற்றும் நிகண்டுகள் பற்றி எழுதுக.

## பிரிவு-ஆ

**எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க. **5x4=20**

29. இரட்டை வழக்குமொழி என்றாலென்ன?
தமிழ்மொழி இரட்டை வழக்கு மொழியா? விளக்கம் தருக.

30. பேச்சுப் பயிற்சி வழங்கும்போது ஆசிரியர் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை யாவை?

31. படித்தலின் வகைகளை கூறி அவற்றின் நிறை, குறைகளைக் கூறுக.

32. உரைநடை வகைகளை விவரிக்கவும்.

33. பல்வகுப்புக் கற்பித்தலில் எந்தெந்த வகுப்புகளை இணைத்து எந்தெந்தத் திறன்களைக் கற்பிக்கலாம் என விளக்குக.

34. துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கங்கள் நான்கினை விவரிக்கவும்.

35. கற்றல் பொருள்களின் பயன்களை கூறுக.

36. கேட்டல் திறன் வளர்க்கக் கணினி எவ்வகையில் பயன்படுகிறது?

## பகுதி-III

**ஒவ்வொரு** வினாவிற்கும் **500** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்க. **2x10=20**

**37.** (அ) குழந்தைகள் எழுதப் பழகுமுன் எவ்வாறெல்லாம் பயிற்சி அளிப்பாய் என்பதை விரிவாக விளக்குக.

**அல்லது**

(ஆ) விதி வருமுறை, விதி விளக்குமுறைகளை விரிவாக விளக்குக.

**38.** (அ) விரிவுரை முறையை விரிவாக விளக்கி அதன் நிறை குறைகளைக் குறிப்பிடவும்.

**அல்லது**

(ஆ) பாடங் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமை, எழுதுவதில் நன்மைகள், மற்றும் பண்புகளை விவரிக்கவும்.

-o0o-